செய்தி வெளியீடு எண்: 277 நாள்: 09.05.2019

<u>செய்தி வெளியீடு</u>

**நான்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு மற்றும் மறு வாக்குப்பதிவு நடைபெறும் 13 வாக்குச் சாவடிகளில் முன் ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர்களுடன் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்தியபிரத சாகு இ.ஆ.ப., காணொலி காட்சி மூலம் ஆய்வு**

எதிர்வரும் 19–ம் தேதி நடைபெறவுள்ள சூலூர், அரவக்குறிச்சி ஒட்டப்பிடாரம், திருப்பரங்குன்றம் ஆகிய தொகுகளின் வாக்குபதிவு முன் ஏற்பாடுகள் மற்றும் 13 வாக்குச் சாவடிகளில் மறு வாக்குப் பதிவு செய்தல் குறித்து தலைமை செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் இன்று 09,05,2019 காணொலி காட்சி மூலம் ஆய்வு நடைபெற்றது.

இடைத்தேர்தல் நடைபெறும் நான்கு சட்டமன்ற தொகுதிகள் மற்றும் மறுவாக்குப்பதிவு நடைபெறும் 13 வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள பகுதிகளில் பாதுகாப்பை அதிகப்படுத்துதல், கண்காணிப்புக் கேமராக்களை அதிக அளவில் அமைத்தல் ஆகியவற்றை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் எனவும் 100 சதவீதம் வாக்காளர் சீட்டுகளை இம்மாதம் 15–ம் தேதிக்குள் விநியோகம் செய்திடவும், வாக்குச் சாவடி அலுவலர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்குதல் மாற்றுதிறனாளிகள் வாக்களிக்க வசதியாக சாய்வு தளங்கள் அமைத்தல் அவர்களுக்கு உதவியாளருடன் கூடிய சக்கரநாற்காலிகள் வழங்குதல்

ஆகிய பணிகளை விரைந்து செய்திடவேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், ஆய்வு கூட்டத்தில் தலைமை தேர்தல் அதிகாரி பேசும்போது வாக்குச்சாவடியின் முன்பகுதி மற்றும் வெளிப்பகுதிகளிலும், வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும் மையங்களிலும் பாதுகாப்பு கருவிகள், சிசிடிவி கேமராக்கள் அமைத்தல், வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்களை கணினி மூலம் நியமனம் செய்தல், வாக்குப்பதிவு எந்திரங்களை எடுத்துச்செல்லும் வாகனங்களில் கண்காணிப்பு கருவிகளை பொருத்துதல் ஆகியவற்றை செய்திட அறிவுரை வழங்கினார்.

வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப்பொருட்களை வழங்குவதை தீவிரமாக கண்காணித்து தடுத்திடவும், சட்டத்திற்கு புறம்பாக பணம் மற்றும் பொருட்களை எடுத்து செல்வதை தடுக்க கூடுதல் சோதனைச் சாவடிகளை அமைத்து கண்காணிக்கவும் அறிவுரை வழங்கப்பட்டது. இடைத்தேர்தல் நடைபெறும் பகுதிகளில் விழிப்புணர்வு பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது.

காணொலி காட்சி ஆய்வு கூட்டத்தில் கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரிகள் திரு. எம். பாலாஜி, இ.ஆ.ப., திரு.வி. ராஜாராமன் இ.ஆ.ப., இணை தலைமை தேர்தல் அதிகாரிகள் திரு. தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., திரு.வே. மணிகண்டன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**